**மேல் மாகாண சபை - 2018**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மேல் மாகாண சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2019 யூன் 14 ஆம் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 06 ஆம் திகதி வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 (1) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மேல் மாகாண சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்கிய ஒவ்வொரு நிறுவனத்தினதும் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மேல் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக முகாமையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 27 மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தொடர்பான ஒதுக்கீட்டுக் கணக்குகளின் (குறிப்பு (i)) நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு அறிக்கைகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 8,081,758,372 தொகையாக இருந்த போதிலும் மேற்படி பெறுமதி நிதி நிலைமைக் கூற்று மற்றும் கணக்குகளிற்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் கணக்கீட்டிற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரசாங்கத்தின் நிலையான சொத்துக்களின் கணக்கீடு இது வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டு இறுதிக் கணக்குகளில் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு உள்ளோம். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது | ஒதுக்கீட்டுக் கணக்கின் | எதிர்காலத்தில் இதற்காக சொத்துக்கள் முகாமைத்துவ |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையலலாச் சொத்துக்களின் கொள்வனவுகளிற்காக ஏற்பட்ட செலவினத்திற்கும் நிதியக் கணக்கின் பிரகாரமான செலவினத்திற்கும் இடையே ரூபா 1,849,369,710 தொகையான வேறுபாடுகள் காணப்பட்டன. | பிரகாரமான செலவினம் நிதியக் கணக்கின் பிரகாரமான செலவினத்திற்கு சமப்படுத்தப்பட வேண்டும். | மென்பொருள் அறிமுகப்படுத்தப்படும். |
| (ஆ) | வருமானக் கணக்குகளின் பொழிப்புக்களின் பிரகாரம் 06 வருமானக் குறியீடுகளிற்காக 2018 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் தொடர்பாக திணைக்களப் புத்தகங்கள் மற்றும் திறைசேரி அச்சீட்டுப் பிரதிகள் என்பவற்றிற்கிடையே ரூபா 50,955,251 வேறுபாடு காணப்பட்டது. | கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு சரியான மீதி உள்ளடக்கப்பட வேண்டும். | திறைசேரி அச்சீட்டுப் பிரதிகளின் மீதிகள் சரியானது. மாகாண நிதி ஒழுங்குவிதி 307.3 இன் பிரகாரம் மீதியை சீர்செய்வதற்கு உரிய நிறுவனங்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் சுகாதாரத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கிலுள்ள (குறிப்பு (iii)) கட்டுநிதிக் கணக்கின் பொழிப்பறிக்கையின் மீதி ரூபா 1,233,836,341 ஆக காணப்பட்டதுடன் நிதியக் கணக்கில் பெறவேண்டிய கட்டுநிதிக் கணக்கு மீதி ரூபா 1,233,182,956 தொகையாக காணப்பட்டதால் ரூபா 653,385 வேறுபாடு காணப்பட்டது. | கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு சரியான மீதி உள்ளடக்கப்பட வேண்டும். | நிதியக் கணக்கில் பதிவு செய்யப்பட்ட மீதி சரியானது. |
| (ஈ) | ஒரு அமைச்சு மற்றும் ஒரு திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கிலுள்ள (குறிப்பு (iv)) பணவனுப்பல் கணக்கு (remittance account) தொடர்பான ரொழிப்பறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு மாகாண திறைசேரிப் புத்தகங்களின் கீழ் பணவனுப்பல் மீதி இல்லையென காட்டப்பட்டிருக்காத போதிலும் நிதியக் கணக்கின் பிரகாரம் அந் நிறுவனங்கள் தொடர்பாக ரூபா 12,254,524 மீதி காட்டப்பட்டிருந்தது. | கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு சரியான மீதி உள்ளடக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பணவனுப்பல் கணக்குகளின் ஆரம்ப மீதி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 3,907,352 தொகையான ஆரம்ப மீதி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பணவனுப்பல் கணக்குகளின் பொழிப்பு அறிக்கையில் (குறிப்பு (iv)) காட்டப்பட்டிருந்தது. | கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு சரியான மீதி உள்ளடக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**1.6.3 கட்டுநிதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் 14 நிறுவனங்களிற்குரிய தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி மீதிகள் ரூபா 999,144,684 கூட்டுமொத்தமாகும். | கணக்காண்டின் இறுதியில் அனைத்து கட்டுநிதி மீதிகளும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | 14 அலுவலகங்களின் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டு வருகின்றன. |

**1.6.4 பணவனுப்பல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் 19 நிறுவனங்களிற்குரிய தீர்ப்பனவு செய்யப்படாத பணவனுப்பல் மீதிகள் ரூபா 15,494,887 கூட்டுமொத்தமாகும். | பணவனுப்பல் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | 19 அலுவலகங்களின் மீதி தீர்ப்பனவு செய்யப்பட்டு வருகின்றன. |

**1.6.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 மே 11 ஆம் திகதிய 2007/09 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு | மீள வேலைக்கமர்த்தப்பட்ட ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிற்கு ஓய்வூதியக் கொடுப்பனவுடன் செலுத்தப்பட வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படி கொடுப்பனவு செய்யப்படுவதால் மீண்டும் வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்படக் கூடாத போதிலும் 2010 சனவரி 01 தொடக்கம் 2018 சனவரி 31 வரையான காலப்பகுதிக்காக வாழ்க்கைச் செலவுப் படியாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் 04 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 813,404 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | 2007 மே 11 ஆம் திகதிய 2007/09 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப் படி முழுமையாக வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2012 இன் 04 ஆம் இலக்க காணி அபிவிருத்தி நியதிச்சட்டத்தின் 04(02) மற்றும் 06(3) ஆம் பிரிவுகள் | அரச காணியொன்று அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பாக மாகாண சபையில் இணக்கப்பாட்டை வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையானது விதிகள் மூலம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | விதிகள் மூலம் நடைமுறைகள் குறிப்பிடப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. வருமான நிர்வாகம்

### 2.1 நிலுவை வருமானம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய 30 வருமானக் குறியீடுகளின் கீழ் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதில் 15 வருமானக் குறியீடுகளிற்குரிய ரூபா 2,878,588,181 தொகையான வருமானம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிலுவையாக காணப்பட்டது. | வருமான நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவையாக காணப்பட்ட 15 வருமானக் குறியீடுகளிற்குரிய ரூபா 2,598,249,351 தொகையான வருமான நிலுவைகள் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தன. |
| (ஆ) | அகலவத்தை பிரதேச செயலக பிரிவிற்குச் சொந்தமான 15 ஏக்கர்கள் 3 றூட்கள் மற்றும் 38.5 பேர்ச்கள் பரப்பளவான காணி ஆண்டொன்றிற்கு ரூபா 79,200 தொகை வீதம் 2003 பெப்ரவரி 28 இல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகையின் வருடாந்த அதிகரிப்பு 10 சதவீதமாக காணப்பட்டது. எனினும் ரூபா 1,252,035 தொகையான அதிகரிப்பை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த குத்தகை அதிகரிப்பை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,322,890,536 பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 401,630,872 ஆக காணப்பட்டது.

**3.2 நிதிக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நடைமுறைக் கணக்குகளிலுள்ள ரூபா 2,649,000,000 தொகை ஒரு நாள் முதலீட்டில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அத் தொகை குறுங்கால முதலீடுகளாக காணட்டப்படாமல் நடைமுறைக் கணக்குகளின் மீதிகளாக காட்டப்பட்டிருந்தது. | குறுங்கால முதலீடுகளாக கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**4. நியதிச்சட்டக் கணக்குகள்/ நிதியக் கணக்குகள்/ வர்த்தக முற்பணக் கணக்குகள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்குகள்**

**4.1 நியதிச்சட்டக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) கழிவு முகாமைத்துவ அதிகாரசபை** | | |
| (i) 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ‘‘கரதியான கழிவு முற்றம்’’ தொடர்பாக 2019 மே 08 இல் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பூர்வாங்க அறிக்கையின் பிரகாரம் கழிவகற்றல் இடத்திலிருந்து 20 மீற்றர் தொடக்கம் 70 மீற்றர் வரையான தூரத்திற்கு அப்பால் அமைந்துள்ள 19 வீடுகளுடன் காணப்படுகின்ற இக்காணி மிகவும் ஆபத்தான இடமொன்றாகவும் காணியினுள் விஷக் காற்று வெளிப்படுதல் இடம்பெறக்கூடியதாகவும் இனங்காணப்பட்டிருந்தது. 2017 இன் 01 ஆம் இலக்க கழிவு முகாமைத்துவ அதிகாரசபை நியதிச்சடத்தின் பூர்வாங்க நோக்கங்களின் பிரகாரம் | 2007 இன் 01 ஆம் இலக்க கழிவு முகாமைத்துவ அதிகாரசபை நியதிச்சடத்தின் பூர்வாங்க நோக்கங்களிற்கு இணங்க கழிவகற்றல் முற்றம் முகாமை செய்யப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | இக்கழிவு முற்றம் முகாமை செய்யப்பட்டிருக்காததுடன் தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரத்தை பெற்றக்கொள்ளாமல் இது பேணப்பட்டிருந்தது. | | |
| (ii) | ஆசிய அபிவிருத்தி வங்கி மானியங்களின் கீழ் ரூபா 23.5 மில்லியன் தொகையான செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு 2006 ஆம் ஆண்டில் அதிகாரசபை தீர்மானித்திருந்ததுடன் இது தொடர்பாக ரூபா 90 மில்லியன் இழப்பீட்டையும் 11.3 சதவீத சட்டரீதியான வட்டியையும் செலுத்துவதற்கு பிணக்குத்தீர்த்தல் சபை 2012 ஆம் ஆண்டில் தீர்மானித்திருந்தது. அதிகாரசபையால் உச்ச நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அதன் மீதான மேன்முறையீடு 2018 ஆகஸ்ட் 31 இல் நிராகரிகரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க உரிய நிறுவனத்திற்கு ரூபா 111 மில்லியன் தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது. | உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியதுடன் பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2011 தொடக்கம் 2014 வரையான ஆண்டுகளின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சு உள்ளடங்கிய பல்வேறு அமைச்சுக்கள் ஊடாக ரன் அருண I, II, III நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வீதிகளை காப்பெற் இடுதல் மற்றும் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாராந்த சந்தை மற்றும் பிரசவ மற்றும் குழந்தைகள் சிகிச்சை நிலையங்கள் என்பவற்றின் | பெறப்பட வேண்டிய பணம் அறவிடப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| நிர்மாணம் உள்ளடங்கிய செயற்திட்டங்களை நிறைவேற்றுதல் சார்பில் பொது திறைசேரியிடமிருந்து பெறவேண்டியவைகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,224 மில்லியன் தொகை 2019 மே வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| **(ஆ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை** | | |
| மாகண விதி அபிவிருத்தி அதிகாரசபையின் அஸ்கிரிய, மொறகஹஹேன மற்றும் இரத்மலானை பிராந்திய இயந்திரவியல் பொறியியல் அலுவலகங்கள் ஊடாக இயந்திரங்களை வாடகைக்கு விடுதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 33.5 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அம்மீதியில் 1996 ஆம் ஆண்டிலிருந்து பெறப்பட வேண்டி காணப்பட்ட மீதிகளை உள்ளடக்கியிருந்தது. பல்வேறு விடயங்கள் காரணமாக இவ் மீதிகளின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளது. | பெறப்பட வேண்டிய பணம் அறவிடப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) கமநல சேவைகள் அதிகாரசபை** | | |
| சிரம சவிய நிகழச்சித்திட்டத்தின் கீழ் அமைச்சு செயலாளரால் 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட ரூபா 7.5 மில்லியன் பணத் தொகையில் 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு முன்மொழிவுகளில் உள்ளக்கப்பட்டிருக்காத விவசாய உபகரணங்களின் கொள்வனவுகள் பெறுகை நடைமுறையிலிருந்து விலகி மேற்கொள்ளப்பட்டு ரூபா 7,436,845 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அக் கொள்வனவுகளில் ரூபா 596,625 பெறுமதியான 35 புல்வெட்டும் இயந்திரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதேபோல் | பெறுகை நடைமுறையிலிருந்து விலகியதற்கான காரணங்கள் மற்றும் புல்வெட்டும் இயந்திரங்களின் பகிர்ந்தளித்தல் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

2018 சனவரி 11 இல் மீண்டும் பெறுகை நடைமுறையிலிருந்து விலகி ரூபா 1,705,500 தொகைக்கு 85 புல்வெட்டும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட 100 புல்வெட்டும் இயந்திரங்கள் ''சிதமு'' செயற்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட நபர்களுக்கு தலைவரால் வழங்கப்பட்டிருந்தன.

### 4.2 ஏனைய முற்பணக் கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பஹா வலயக் கல்வி அலுவலகங்களிலிருந்து 8 ஏனைய மாகாண சபைகளிற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற 48 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 3,825,170 தொகையாகும். | ஏனைய மாகாண சபைகளிற்கு உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் போது கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு முறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கம்பஹா வலயக் கல்வி அலுவலகத்தில் பதவி இடைநிறுத்தப்பட்டுள்ள 02 உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் ரூபா 47,725 தொகையாக காணப்பட்டதுடன் அம் மீதிகள் 4 ஆண்டுகளிற்கு மேலாக காணப்படுகின்றன. | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண ஆயுர்வேத திணைக்களம் மாதாந்தம் ரூபா 55,000 விலைவீதத்தில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிற்கு | தேவைப்பாடு இனங்காணப்பட வேண்டியதுடன் ஆகக்கூடிய | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | முறையே ரூபா 850,500 மற்றும் ரூபா 628,750 வாடகையை செலுத்தி மாதமொன்றிற்கு 04 நாட்கள் அலுவலக வேலைக்காக கம்பஹா மாவட்டத்தின் 04 பிரிவுகளில் இடங்களை பெற்றிருந்தனர். | நன்மையை பெறுவதற்கு மிகக்குறைந்த கிரயம் செலவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | மதுகம கல்வி வலயத்தில் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டமொன்றிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 7,500,000 நிதியேற்பாடுகள் ஏனைய நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. | தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2014 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின் போது நீண்டகால குத்தகை அடிப்படையில் மில்லனிய பிரதேச செயலக பிரிவினுள் 1.5 ஹெக்டெயர்களில் 10 காணித் துண்டுகளை வழங்குவதற்காக மாகாண காணி ஆணையாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அக் காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கு தற்போது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் படி சான்றிதழ்களான ஈஎஸ் 57 மற்றும் ஈஎஸ் 49 ஆகியவற்றின் கீழ் 01 ஏக்கர் 02 றூட்கள் பரப்பளவான காணியொன்று அதிகாரமளிக்கப்படாமல் பெறப்பட்டிருந்தது. | காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கம்பஹா மாவட்ட வைத்தியசாலையின் புதிய கட்டிடத்தின் மத்திய வளிப் பதனாக்கி முறைமை 2017 ஆம் ஆண்டில் ரூபா 518,623 தொகையும் 2018 ஆம் ஆண்டின் செப்தெம்பர் வரை ரூபா 1,720,503 தொகையும் செலுத்தப்பட்டு திருத்தம் செய்யப்பட்டிருந்தது. வைத்தியசாலைக்குச் சொந்தமான ஏனைய 120 வளிப் பதனாக்கி இயந்திரங்களில் செயற்படும் நிலையில் காணப்பட்ட வளிப் பதனாக்கி | வளிப் பதனாக்கி முறைமை செயற்படும் நிலைக்கு கொண்டுவரப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 65 ஆகும். 32 வளிப் பதனாக்கி இயந்திரங்கள் 2018 செப்தெம்பர் அளவில் செயற்படாத நிலையில் காணப்பட்டதுடன் அதில் 23 வளிப் பதனாக்கி இயந்திரங்களின் திருத்தம் ஆக்கபூர்வமானதாக இருக்காதமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2017 யூன் 27 இல் கம்பஹா மாவட்ட வைத்தியசாலையின் Dialysis பிரிவிற்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் 04 Dialysis இயந்திரங்கள், 01 Ro பொறி மற்றும் 02 Dialysis கட்டில்களை வழங்கிருந்தது. 2018 செப்தெம்பர் 14 வரையிலும் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்காததால் வைத்தியசாலையின் வேண்டுகோளின்றி வழங்கப்பட்ட மேற்படி உபகரணம் உள்ளடங்கிய பெட்டிகள் புதிய கட்டிடத்தின் 6 ஆவது மாடியிலுள்ள கொரிடோரில் பாதுகாப்பற்று வைக்கப்பட்டிருந்தன. எந்தவொரு பயன்பாட்டிற்கும் வழங்கப்படாமல் இடப்பட்ட பொதி அகற்றப்பட்டிருக்காத இவ் உபகரணத்தின் பொறுப்புக் காலப்பகுதிக்குரிய காலம் கடந்திருந்தது. அதே போல் மேற்படி பிரிவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு 3 மருத்துவ உத்தியோகத்தர்கள், 2 தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் கனிஷ்ட பதவியணியினரின் ஒரு நபர் ஆகியோர் பயிற்றுவிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | நோயாளர்களிற்கான வழங்கல் சேவைகளிற்கு இவ் உபகரணம் உடனடியாக பயன்படுத்தப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 5.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையின் களஞ்சியங்களில் ரூபா 534,721 பெறுமதியான 8 வகையான காலாவதியான மருந்துகள் காணப்பட்ட போதிலும் அம் மருந்துகளை அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான மருந்துகளை அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் அகற்றல் குழு ஒன்றின் மூலம் இம் மருந்துகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | வதுபிட்டிவல வைத்தியசாலையில் மருந்துகள் காலாவதியாகுதல் காரணமாகவும் கறையான் மற்றும் எலிகளால் சேதம் ஏற்பட்டதன் காரணமாகவும் 2018 யூலை 20 மற்றும் 21 இல் அகற்றப்பட்ட மருந்துகளின் இருப்பு பெறுமதி ரூபா 1,260,821 தொகையாகும். | மருந்துகள் காலாவதியாவதற்கு முன்னர் தேவையான வைத்தியசாலைகளிற்கு வழங்குவதற்கான நடைமுறையொன்று ஒழுங்கு செய்யப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 5.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆளுநரிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு மாதமொன்றிற்கு ரூபா 30,000 விலைவீதத்தில் 11 நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களிற்கு உத்தியோகபூர்வ விடுதிகளின் வாடகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2017 நவம்பர் தொடக்கம் 2019 ஏப்ரல் வரை ரூபா 5,340,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இவ் உத்தியோகத்தர்களில் 10 உத்தியோகத்தர்கள் மேல் மாகாணத்தினுள் | மாகாணத்தினுள் குடியிருக்கும் உத்தியோகத்தர்களிற்கு உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகை கொடுப்பனவுகள் முறையற்றவாறு காணப்பட்டது. | படிகளை அங்கீகரிப்பதற்கான அதிகாரத்தை மாகாண ஆளுநர் கொண்டுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| | குடியிருப்பதுடன் அவர்களில் 08 உத்தியோகத்தர்களின் நிரந்தர வதிவிடங்களில் அவர்கள் குடியிருப்பவர்களாக உள்ளனர். | | |
| (ஆ) | டபிள்யூபி/ஜேபி/மாலபே ஸ்ரீ ராகுல பாளிகா மஹா வித்தியாலயத்தின் உள்ளக அரங்கு நிர்மாணத்திற்காக சந்தைச் செயற்திட்டத்திலிருந்து 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,869,759 மற்றும் ரூபா 1,433,206 தொகைகளாக ரூபா 3,255,575 கூட்டுமொத்த தொகை உழைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணம் உள்ளக அரங்கு நிர்மாணத்திற்கு செலவிடப்படாமல் ஏனைய செயற்பாடுகளிற்கு செலவிடப்பட்டிருந்த போதிலும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் தொடர்பான விபரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களிற்கு உழைக்கப்பட்ட பணம் பயன்படுத்தப்பட வேண்டும். | முறையான அங்கீகாரம் காணப்படாததன் காரணமாக ஏனைய நடவடிக்கைகளிற்கு பணம் பயன்படுத்தப்பட்டிருந்தது. |

**5.4 குறைப்பயன்பாட்டு நிதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மாதாந்தம் நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 01 மில்லியன் தொடக்கம் ரூபா 104 மில்லியன் வரையான வீச்சில் அசாதாரணமான காசு மீதியொன்றை வீதி அமைச்சு பேணியிருந்தது. | மேலதிக பணம் மாகாணத் திறைசேரிக்கு மீளளிக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கம்பஹா மாவட்ட வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதன் மூலம் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட ரூபா | உரிய நிதிகள் செயற்திறனான நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | 4,754,800 தொகையான பணத்திலிருந்து வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை திருத்தம் செய்வதற்கு 2017 ஆம் ஆண்டின் கேள்வி மதிப்பீட்டுக் குழு முன்மொழிந்திருந்த போதிலும் 2018 செப்தெம்பர் வரையிலும் சிற்றுண்டிச்சாலையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | களுத்துறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ விடுதிகளை அகற்றி புதிய விடுதிகளை நிர்மாணிப்பதற்காக 2014 யூலை 31 இல் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ரூபா 4,100,000 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உரிய பணம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக பாணந்துறை ஆதார வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை வாடகைக்கு வழங்குவதிலிருந்து உழைக்கப்பட்ட ரூபா 1,524,871 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | உரிய பணம் செயற்திறனான செயற்பாடுகளிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**5.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் பணியகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் கணக்காளர் பதவி காணப்படாத போதிலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 7,500 வீதம் முறையே ரூபா | பதிற்கடமை அடிப்படையில் நியமனத்தை மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியில் வெற்றிடம் காணப்பட வேண்டும். | அதிக வேலைப் பழு காணப்பட்டதன் காரணமாக சேவை பெறப்பட்டு பணம் செலுத்தப்பட்டிருந்தது. |

7,020,000 மற்றும் ரூபா 1,462,500 தொகைகள் பதவிகளில் பதிற்கடமையாற்றியதற்காக செலுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக 2013 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியின் போது பிராந்திய அலுவலகங்களில் பதவியில் பதிற்கடமையாற்றியதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கணக்காளரிற்கு ரூபா 405,000 தொகை வழங்கப்பட்டிருந்தது.

## 5.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் வாகன விபத்துக்களிற்கு பொறுப்பான சாரதியிடமிருந்து நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் 07 வாகனங்களிலிருந்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ரூபா 301,273 தொகையான நட்டங்கள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட வேண்டியிருந்தன. மேலும் 05 மோட்டார் வாகனங்கள் தொடர்பாக ஏற்பட்ட ரூபா 1,514,167 தொகையான நட்டங்களை காப்புறுதி பூட்கையிலிருந்து அல்லது மூன்றாம் தரப்பிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அவை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை தாமதமடைந்திருந்தால் காலவரையறை காரணமாக அறவீடு சந்தேகத்திற்கிடமாக காணப்பட்டது. | அறவீடு தொடர்பான செயன்முறை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 5.7 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 யூன் 14 இல் ஒப்பந்த பெறுமதியின் 30 சதவீதமான ரூபா 6,590,273 தொகையான முற்பணத்தை செலுத்துவதன் மூலம் கம்பஹா மாவட்ட வைத்தியசாலையின் பிணவறை கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் நிர்மாண நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. உரிய காலப்பகுதியிலிருந்து அண்மையில் ஒரு வருடம் கடந்திருந்த போதிலும் அத்திவார வேலைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகள் அரைவாசியில் நிறுத்தப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 16 ஆம் திகதிய செயலாற்றல் பிணைமுறி காசாக மாற்றப்பட முடியாதிருந்ததால் ரூபா 2,673,327 தொகையான பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பெறுமதியை கழித்ததன் பின்னர் ரூபா 3,916,946 மிகுதிப் பணம் அறவிடப்பட முடியாதிருந்தது. | பொறுப்பான தரப்பினர்களிற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 5.8 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்

### 5.8.1 தாமதமான செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| களுத்துறை கல்வி வலயத்தில் 2016, 2017 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படுவதற்கு இணங்கப்பட்ட 10 பாடசாலைகளின் கட்டிட நிர்மாணக் காலப்பகுதி அசாதாரணமாக நீடிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணங்களின் செயன்முன்னேற்றம் இனங்காணப்பட்டு உடனடியாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

### 5.8.2 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீடுகளை தயாரித்தல், பெறுகை நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்ததாரரை தெரிவு செய்தல் என்பன முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்காததால் ரூபா 98.3 மில்லியன் தொகையான சென் மேரி மஹா வித்தியாலயம் மற்றும் தர்மராஜா கனிஷ்ட வித்தியாலயம் என்பவற்றின் 3 கட்டிடங்களின் நிர்மாணங்கள் அடிக்கல் இடப்பட்ட பின்னர் கைவிடப்பட்டிருந்தது. | குறைபாடுகள் சீர்செய்யப்பட்டு நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ரூபா 42,800,110 தொகையான மதிப்பிடப்பட்ட பெறுமதியில் தினியாவல சிகிச்சை நிலையக் கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ரூபா 4,225,167 தொகையான பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பெறுமதி தொடர்பாக ரூபா 236,871 தொகை ஒப்பந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட வேலைகள் அரைவாசியில் நிறுத்தப்பட்டிருந்தன. | செயன்முன்னேற்றம் இனங்காணப்பட்டு உடனடியாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மாகாண சபை நிதியேற்பாடுகளின் கீழ் 2015 ஆம் ஆண்டின் போது பாலிந்தநுவர கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக twig tea செயற்திட்டமொன்றிற்காக ரூபா 1,100,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இச் | செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் வெற்றியளித்திருக்காததுடன் மேற்படி செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட பொலித்தீன், மேவுகை வலைகள் போன்றன பாதுகாப்பற்றவாறு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | தொடங்கொட தேபுவன அரப்பலகந்த வத்தயிலுள்ள மாபொட பிரிவின் மக்களிற்கான குடிநீர் பெறுவதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 398,630 தொகை செலவிடப்பட்டு பொதுக் கிணறு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய வேலைகளிற்கான நிதியேற்பாடுகள் காணப்படாததன் காரணமாக செயற்திட்ட வேலைகள் அரைவாசியில் நிறுத்தப்பட்டிருந்தன. | நிதியேற்பாடுகள் பெறப்பட்டு மேலதிக வேலைகள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**5.9 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**5.9.1 முறையாக கையளிக்கப்படாத காணிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பஹா சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் முகாமை செய்யப்படுகின்ற வைத்தியசாலைகள், மருந்தகங்கள் மற்றும் 200 மருத்துவ நிலையங்களில் கம்பஹா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், 02 வைத்தியசாலைகள், 04 மத்திய மருந்தகங்கள் மற்றும் 01 சிகிச்சை நிலையம் என்பவற்றின் காணி உரிமைத்துவம் காணப்படாததுடன் 04 நிறுவனங்களின் கையளித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் கையளித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய | செயற்பாடுகளை கையளிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அளவைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத வைத்தியசாலைகள், மருந்தகங்கள் மற்றும் சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 150 ஆகும். | | |
| (ஆ) | 1.978 ஹெக்டெயர் பரப்பளவான காணியில் மினுவாங்கொட ஆதார வைத்தியசாலையால் 1954 ஆம் ஆண்டில் நோயாளர் சிகிச்சை சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் காணிக்கான முறையான கையளிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கையளிக்கும் உரித்துறுதிகளை பெற்றுக்கொளவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

### 5.9.2 விளைவற்ற / குறைப்பயன்பாட்டு சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2000 ஆம் ஆண்டில் கம்பஹா மாவட்ட வைத்தியசாலையின் ஆரம்ப சிசிச்சைப் பிரிவில் நிறுவப்பட்டுள்ள ஊடுகதிர் (X-Ray) இயந்திரம் ஏறத்தாழ 3 ஆண்டு காலமாக செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. ஆரம்ப சிகிச்சைப் பிரிவிலுள்ள 2 இயந்திரங்களில் ஒரு நடமாடும் ஊடுகதிர் இயந்திரம் பல ஆண்டுகளாக செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் பற்சிகிச்சை பிரிவில் நிறுவப்பட்டுள்ள 2 இயந்திரங்களில் ஒரு ஊடுகதிர் இயந்திரம் ஏறத்தாழ ஒரு ஆண்டு காலமாக விளைவற்றிருந்தது. | அவை பயன்படுத்தப்பட முடியாதவையாக இருந்ததால் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையின் விசேட ஆரம்ப பிள்ளை (Special Infants) சிசிச்சை நிலையத்தின் தேவைப்பாடுகளிற்காக வழங்கப்பட்ட 04 செயற்கைச் சுவாசக் கருவிகளில் (Vantilators) ஒரு செயற்பகைச் சுவாசக் கருவி மாத்திரம் | பயன்படுத்தப்பட முடியாத பொருட்களை அகற்றுவதற்கும் ஏனைய பொருட்களை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படும் நிலையில் காணப்பட்டது. மேலும் 2017 சனவரி 20 இல் பெறப்பட்ட 480 முகமூடிகள் (face covers), 2017 மார்ச் 08 இல் பெறப்பட்ட 434 தாதியர் சட்டைகள் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெறப்பட்ட 50 தொப்பிகள் (Head covers) மற்றும் 70 கைத்துவாய்கள் என்பன பயன்படுத்தப்படாமல் களங்சியங்களில் காணப்பட்டதுடன் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அன்பளிப்புக்களாக பெறப்பட்ட 139 மெத்தைகள் கூரை உடைத்திருந்த சீற் களஞ்சியமொன்றில் (a sheet store) களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | வேண்டும். | |
| (இ) | திருத்தத்திற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட 04 வாகனங்களின் திருத்தத்திற்காக அதிகாரசபையால் வழங்கப்பட்ட மதிப்பிடுகளை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக அவ்வாகனங்கள் 3 ஆண்டுகள் தொடக்கம் 8 ஆண்டுகள் வரையான நீண்டகால வீச்சில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வாகனத் தரிப்பிடத்தில் அழிவடைந்து காணப்பட்டது. | உரிய நிறுவனங்களில் பொறுப்பாக இருக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மிலுவாங்கொடை ஆதார வைத்தியசாலையின் ஆய்வுகூடத்திற்கு 2015 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ஒரு 3 Part Haematology, 01 Semi Automated Biochemistry Analyser மற்றும் 01 1000 VA Isolation Transformer என்பன பயன்படுத்தப்படாமல் பொதிசெய்யப்பட்ட நிலையில் காணப்படுவதுடன் அவற்றின் உத்தரவாதக் காலப்பகுதி பொதி செய்யப்பட்ட நிலையிலேயே முடிவடைந்திருந்தது. மேலும் பொதுக் களஞ்சியப் பதிவேட்டின் பிரகாரம் 04 ஆண்டுகளிற்கும் 06 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் போது பெறப்பட்ட 05 வகையான பொருட்களின் 248 அலகுகள் களஞ்சியப்படுத்தப்பட்டு விளைவற்றுக் காணப்பட்டன. | உரிய இயந்திரங்கள் நிறுவப்பட்டு நோயாளர்களிற்கு சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | ஹொரண ஆதார வைத்தியசாலைக்கு 2014 சனவரியில் பெறப்பட்ட ரூபா 3,288,800 பெறுமதியான Exercise ECG இயந்திரம் தற்போது வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ECG இயந்திரம் விளைவற்று வைக்கப்படக் கூடாது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 19 மோட்டார் சைக்கிள்கள் 2016 யூன் மாத்திலிருந்து சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பயன்படுத்தாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | அகற்றுவதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

### 5.9.3 மோட்டார் வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட நோயாளர் காவு வண்டியின் எஞ்சின் 2013 சனவரியில் ரூபா | ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டமைக்கான காரணங்களை புலனாய்வு | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 748,200 செலவிடப்பட்டு திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் 3,336 கிலோமீற்றர்கள் ஓடிய பின்னர் 2013 ஒக்தோபரிலிருந்து ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

## 5.10 பதவியணியினர் நிர்வாகம்

### 5.10.1 மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அலுவலகத்தில் 05 ஆண்டு காலப்பகுதி சேவையை பூர்த்திசெய்திருந்த அனைத்து உத்தியோகத்தர்களும் நிலைய இடமாற்றங்களிற்கு உட்படுத்தப்படுகின்றனர். எனினும் 1,357 உத்தியோகத்தர்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டு சேவைக் காலத்திற்கு மேலாக ஒரே இடத்தில் பணியாற்றுகின்ற போதிலும் 302 உத்தியோகத்தர்களிற்கு மாத்திரம் நிலைய இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேன்முறையீட்டுச் சபையின் தீர்மானங்களின் பிரகாரம் 125 உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் இரத்துச்செய்யப்பட்டிருந்ததுடன் 66 உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | 55 வயதை பூர்த்திசெய்த உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட முடியாதிருந்ததுடன் இடமாற்றங்களை கோரியிருந்த உத்தியோகத்தர்களிற்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

### 5.10.2 பாடசாலை பதவியணியினர்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை கல்வி வலயத்தில் ஆசிரிய பதவிகளில் 214 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் 2014 தொடக்கம் 2018 வரையான | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதியின் போது வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக 09 ஆசிரியர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். | | |
| (ஆ) | களுத்துறை கல்வி வலயத்திற்கு இணைப்பு செய்யப்பட்ட அதிபர் ஒருவர் மற்றும் ஆசிரிய பேதனாசிரியர் ஒருவர் 2015 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியின் போது ஏனைய மேலதிக பதவிகளிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2015 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியின் போது அவர்களது வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 1,355,145 தொகை சம்பளம் மற்றும் கூலிகளாக செலுத்தப்பட்டிருந்தன. | செயலாற்றல் அறிக்கைகளை பெற்றுக்கொண்ட பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பஹா கல்வி வலயத்தில் ஆசிரிய பதவிகளில் 42 வெற்றிடங்களும் அதிபர் பதவிகளில் 51 வெற்றிடங்களும் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நீர்கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்தில் 6 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 17 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | நீர்கொழும்பு கல்வி வலயத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூலமான 24 பாடங்களில் 215 ஆசிரியர் வெற்றிடங்கள் (உயர்தரம் உள்ளடங்கலாக (ஆரம்ப, இரண்டாம் தரம்) காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நீர்கொழும்பு கல்வி வலயத்தின் பாடசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட 05 பதவிகளில் 264 ஆசிரியர் வெற்றிடங்களும் 01 பதவியில் 07 ஆசிரியர் மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்பி ஆசிரிர்களை சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | நீர்கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்காத 2 பதவிகளிற்காக நிரந்தர அடிப்படையில் 155 நபர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | பதவிகள் நெறிப்படுத்தப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. |

### 5.10.2 சுகாதாரப் பதவியணியனர்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை மாவட்டத்தில் உள்ள 10 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் 37 பொதுச் சுகாதார பரிசோதகர்களின் வெற்றிடங்கள் மற்றும் 08 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் 89 குடும்பநல உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் என்பன காணப்பட்டதுடன் அத்தகைய சேவைகள் திருப்திகரமாக பொதுமக்களிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | களுத்துறை மாவட்ட ஆதார வைத்தியசாலைகள் உள்ளடங்கிய நிறுவனங்களில் காணப்படுகின்ற மருத்துவ உபகரணங்களை பிழைகளின்றி திருத்தம் செய்து பேணும் நோக்கத்தில் வாத்துவ உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்தில் 3 பொறியியல் பதவிகள் உள்ளடங்கலாக 07 அத்தியாவசியமான பதவிகளில் 12 வெற்றிடங்கள் காணப்பட்டதால் வெளி நிறுவனங்களிற்கு பணத்தை செலுத்தி சேவைகளை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. | | |
| (இ) | 258 தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் 132 கே.கே.எஸ் ஊழியர்கள் 5 ஆண்டுகள் தொடக்கம் 30 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றுகின்றனர். மேலும் கீழ்நிலை உதவியாளர் (Attendant) சேவையிலுள்ள 35 ஊழியர்களில் 24 ஊழியர்கள் 5 ஆண்டுகள் தொடக்கம் 24 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இவ் வைத்தியசாலையிலேயே பணியாற்றுகின்றனர். | நிலைய இடமாற்ற சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கம்பஹா மாவட்ட வைத்தியசாலையிலுள்ள 18 ஊழிர்கள் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சம்பளமற்ற விடுமுறையை பெற்றிருந்ததுடன் ஒரு ஆண்டிற்கு ஆகக்கூடியது 149 நாட்கள் வரை இது காணப்பட்டது. மேலும் 147 சிற்றூழியர்கள் 3 ஆண்டு காலப்பகுதியின் போது 4005 நாட்கள் சம்பளமற்ற விடுமுறையை பெற்றிருந்தனர். | தொடர்ச்சியாக சம்பளமற்ற விடுமுறையை பெற்ற ஊழியர்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 5 ஆண்டுகளிற்கு மேலாக கம்பஹா மாவட்ட வைத்தியசாலையில் பணிப்பாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன் காலத்திற்கு காலம் தற்காலிக அடிப்படையில் பதவிக்களை பதிற்கடமை பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2018 செப்தெம்பர் மாதமளவில் கம்பஹா மாவட்ட வைத்தியசாலையில் 26 பதவிகளில் 58 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2017 ஆம் ஆண்டில் நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றிய 16 உத்தியோகத்தர்களால் சம்பளமற்ற பிரசவ விடுமுறை பெறப்பட்ட போது விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கான பங்களிப்புக்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான தேவைப்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் 30 வகையான பதவிகளில் 117 வெற்றிடங்களும் 03 வகையான பதவிகளில் 06 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேலதிகமானவைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | வதுப்பிட்டிவல வைத்தியசாலையில் 18 வகையான பதவிகளில் 42 வெற்றிடங்களும் 05 வகையான பதவிகளில் 17 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேலதிகமானவைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | மினுவாங்கொட ஆதார வைத்தியசாலையில் 11 வகையான பதவிகளில் 31 வெற்றிடங்களும் 06 வகையான பதவிகளில் 15 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேலதிகமானவைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | டெங்கு நுளம்பு ஒழிப்பு வேலைகளிற்குத் தேவையான மோட்டார் வாகனங்கள் வழங்கப்பட்டிருக்காத போதிலும் 07 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிற்கு 08 சாரதிகள் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். இச் சாரதிகள் வேறு எந்தவொரு கடமைகளிலும் ஈடுபடுத்தப்பட்டிருக்காமல் 2018 ஆம் ஆண்டில் அவர்களிற்கு சம்பளங்கள் மற்றும் படிகளாக செலுத்தப்பட்ட ரூபா 2,293,598 தொகை சேவை எதனையும் | சாரதிகள் அவர்களிற்குரிய கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

பெற்றக்கொள்ளாமல்
மேற்கொள்ளப்பட்ட
செலவினமொன்றாகக்
காணப்பட்டது.

## 5.11 உள்ளூராட்சி அதிகாரசபை செயற்பாடுகள் மீதான மேற்பார்வை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 13 ஆவது திருத்தத்தின் ஒன்பதாவது பட்டியலின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வை மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வைக்காக முறையான நடைமுறையொன்று அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வைக்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 49 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிலுவை வருமானங்கள் ரூபா 9,805,922,887 தொகை ஆகும். | நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | கொழும்பு மாநகர சபையின் உத்தியோகத்தர்களிற்கு எதிராக விதிக்கப்பட்ட 29 மிகைக்கட்டணங்கள் தொர்பாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பெறுமதி ரூபா 34,111,061 தொகை ஆகும். | பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து மிகைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | |

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தூய்மையாகவும் அழகாகவும் ஒழுங்காகவும் வைத்தியசாலை வளாகங்களை பேணுவதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு நீர்கொழும்பு பொது வைத்தியசாலையால் மாதமொன்றிற்கு ரூபா 1.6 மில்லியன் தொடக்கம் 1.8 மில்லியன் வரையான பணத் தொகை செலவிடப்படுகின்ற போதிலும் வைத்தியசாலை வளாகங்கள் ஒழுங்கின்றியும் துப்பரவின்றியும் காணப்பட்டன. | வைத்தியசாலை வளாகங்களை துப்பரவாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

### 6.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக மாகாண சபை அறிந்திருந்த போதிலும் அந் நோக்கங்களிற்கான புதிய உலகளாவிய சுட்டிகள் ஊடாக மாகாண சபையின் அதிகார எல்லைப் பிரதேச மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சுகாதாரத்தை தரமுயர்த்துவதற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொறுப்புக்கள் குறித்துரைக்கப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |